RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1933

OPEN ACCESS

# புறநானூற்றில் அறச்சிந்தனைகள்

அ. முத்து சிவகாமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை-600102, தமிழ்நாடு, இந்தியா

# Moral Deeds in Purananuru

A. Muthu Sivagami [a, *]

[a] Department of Tamil, Valliammal Women's College, Chennai-600102, Tamil Nadu, India

* Corresponding Author: Muthusivagami19@gmail.com

Received: 01-08-2022
Revised: 01-10-2022
Accepted: 16-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Ancient text Akananuru and Purananuru are the special text which contains many virtues that are helpful for human beings. Internal and external glory is considered to be the universal glory. Self-purity is one of the virtues of life. Virtue, materiality, pleasure, attainment of wealth, all these are applicable to Purananuru. The purpose of this article is to show that virtue is the life for ancient Tamil people. The people of the Sangam era lived with honesty and integrity in life. Sangam people were effective in different activities like economy, mission, education, guarding etc. this article overall covers the moral deeds that are discussed in Purananuru.

**Keywords:** Purananuru, Akananuru, Education, Guarding

## முன்னுரை

பழந்தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகளில் ஒன்றாகத் திகழ்வது புறநானூறு. புறநானூறு என்றாலே நம் மனதில் ஓர் வீறுணர்ச்சி எழுகிறது. மன்னரது மாண்பும், புலவரது புலமைத்திறனும் ஓங்கிய நிலையில் அறச்சிந்தனையில் மேலோங்கியிருப்பது புறநானூறு. மனித இனம் கூடி வாழும் தன்மையுடையது மனித மனமும் தனித்து வாழ விரும்புவது தான் என்ற செருக்குடன் வாழ நினைப்பது மனித மனதில் இயல்பு. அத்தகைய மனத்தை அடக்கி அதன் செயல்பாட்டை வென்று பரந்த நோக்கில் அறச் சிந்தனையுடன் திகழ்ந்த சங்க கால மக்களின் வாழ்வியலைப் புறநானூறு கூறுகின்றது. மனித உயிர்ப்புடைய எண்ணங்களும் காலப்பகுதியில் கரைந்து போன மனிதர்களின் நடமாட்டம் அந்நூலில் புதைந்து வைக்கப்பட்டுள்ளன. புறநானூறு கூறும் சமூகம் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய பழந்தமிழ்ச் சமூகம் அச்சமூகத்தின் பழக்கவழக்கங்களும், சிந்தனைகளும், மகிழ்வுகளும், துயரங்களும் நமக்கு ஓவியக் காட்சிகளாகப் புலவர் பெருமக்களால் நூலில் காட்டப்பெறுகின்றன. நீதியும், நேர்மையும் நிலைபெற்ற காலம் என்று போற்றப்படும் நிலை இருந்த சங்க காலத்தில் புறநானூற்றின் வழி தமிழரின் அறக் கொள்கையை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

## மன்னர்கள் அறம்

அறம் மனித வாழ்க்கைக்கு அடிப்படையானது. சமுதாயத்தின் நலனுக்கும் அறம் இன்றியமையாதது. அறம் எல்லோராலும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் உயரிய சமுதாயம் ஏற்படும் அறம் திரளும் போது சமூகம் அழிவுக்குத் தள்ளப்படும். சங்க கால மக்கள் அறம்

திரிந்து நடக்க நேரும் பொழுதெல்லாம் அக்கால ஆட்சியாளரான மன்னர்கள் அவர்களைச் செம்மைப்படுத்திப் அறத்தைப் பேணிப் பாதுகாத்தனர்.

நல்வினையினது நன்மையும், தீவினையினது தீமையும் இல்லை என்று கருதி தம் மனம் போனபடி முறை பிறழ்ந்து நடக்கும் சிற்றினத்தாரைத் தம் ஆட்சி குழுவினர் என்றும் விலக்கினர் என்று கா. வெள்ளை வாரணார் கூறுவதில் இருந்து அறியலாம்.

சங்க கால மன்னர்கள் அறம் சார்ந்த பண்புகளை கடைபிடிப்பவர்களாக வாழ்ந்திருக்கின்றனர். தம்மை நாடி வருபவர்களைப் போற்றியும், பாதுகாத்தும் வந்துள்ளனர். தம் குடிமக்களைக் காக்கக்கூடிய அருள் கொண்டவர்களாகவும் வாழ்ந்தனர். மன்னன் மக்களுக்கு இறைவன் போன்று விளங்குபவன் இதனை

"முறை செய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு

இறையென்று வைக்கப்படும்"

என்கிறது திருக்குறள் நாட்டு மக்களுக்கு உயிராக மட்டுமின்றி இறைவனாகவும் மதிக்கப் பெற்றிருக்கின்றான் (Varatharasanaar, 2014). அவர்களின் பண்புகளும் மக்களின் நலனை முன்னிட்டு அறம் சார்ந்ததாகவே விளங்கி இருக்கின்றது.

சங்க கால மன்னர்கள் ஆன்மநேய உள்ளத்தினராகவும் இருந்துள்ளனர் ஆன்மநேயத்தை வள்ளலார் பின்னாளில் ஒரு புரட்சிக்காகச் செய்து வந்துள்ளார். அவரது அந்த உணர்விற்கு வித்து புறப்பாடல்களில் காணப்படுகின்றன. அடிகள் வாடிய பயிரை கண்ட பொழுதெல்லாம் வாடினேன் என்று உளம் கனிய பாடியுள்ளார். இதற்கு ஒரு படி மேலே சென்ற சங்க வேந்தர்கள் அதற்குப் பரிகாரமும் தேடி உள்ளார்கள்.

கொழுகொம்பின்றி ஆடிய முல்லைக் கொடிக்கு தேர் தந்த உள்ளத்தையும், குளிரால் வாடிய மயிலுக்குப் போர்வை போர்த்திய நெஞ்சினையும் தன்னையே ஒரு புறாவிற்காக அளித்த செம்மனத்தையும் என்னவென்றுரைப்பது. வேந்தனின் அறத்திற்கு இவைகள் சான்று பகர்வன அன்றோ

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்னும் மன்னன் தனது ஈரம் நிறைந்த அற மனத்தினால் மகாபாரதப்போர் நிகழ்ந்த காலத்து இருதரப்பு படையினருக்கும் உணவு அளித்து இப்பெயர் பெற்றுள்ளார். இங்கு இவன் பாகுபாடு கருதாமல் இரு தரப்பினருக்கும் சமமாக உணவு வழங்கிய தன்மையே அறச் செயலுக்கு வித்தாகும் (Rasamanickanaar, 1961).

"ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

வறியாயருக்கு ஒன்று ஈவதே ஈகை என்று

ஈத்துவக்கும் இன்பம்"

என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

சங்க கால மன்னர்கள் குறையாத ஈகையை உடையவர்களாக திகழ்ந்திருக்கின்றனர் கூத்தர்களுக்கு பொன்னையும் பொருளையும் வாரி வழங்கி இருக்கின்றனர் பரிசில் வேண்டுகோளுக்கு அரிய பொருள்களை நல்கி இருக்கின்றனர் அளவிறந்த ஈகை மணத்தை உடையவர்களாக வாழ்ந்து இருக்கின்றனர் (Swaminathan, 1971). அவர்களின் ஈகைப்பண்பினை

"ஒரு நாள் செல்லலம் இரு நாள் செல்லலம்

பல நாள் பயின்று, பலரோடு செல்லினும்

தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ"

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன (Swaminathan, 1971).

ஈகை எனும் இரக்க உணர்வால் வாழ்வில் இன்பம் பெருகுவதைக் கண்டு மகிழ்ந்த சங்க கால வேந்தர்கள் அறவாழ்வு வாழ்ந்தனர்.

## சான்றோர் அறம்

சங்க காலத்து சான்றோர்கள் சான்றோர் பெருமக்கள் சீர்மை மிகு செறுக்கோடு செம்மாந்து வாழ்ந்திருந்தனர். எவர் முன்னும் அஞ்சாது தன் எண்ணத்தை எடுத்துரைக்கும் துணிவுப் பெற்றிருந்தனர்.

அவர்கள் அறத்தை வாழ்வின் உயரிய நெறியாகக் கருதி இருக்கின்றனர்.

"அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு

ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

என்னும் குறளுக்கு ஏற்ப குணநலன்களைக் கொண்ட சான்றோர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். பிழை நேரும் இடம் எல்லாம் அதனைத் தடுத்து நிறுத்தி அறவழிச் சமூகம் தழைத்திட புலவர்கள் பலர் இருந்திருக்கின்றனர் (Rasamanickanaar, 1961).

இவ்வுலகுக்கு அரசனது முறையான ஆட்சி உயிர் போன்றது அரசனது ஆட்சி

"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே

மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்

அதனால் யான் உயிர் என்பது அறிகை

வேல் மிகுதானை வேந்தருக்குக் கடனே"

என்ற பாடல் எடுத்துரைக்கிறது ஆட்சி செலுத்தும் அரசன் உலகிற்கு உயிராவான் உயிர்தான் இருக்கும் உடம்புக்கு வந்த நோயை தாங்கிக் கொண்டு அதனைப் பேணுதல் போல அரசன் உலகைக் காப்பதன் பொருட்டு வரும் துன்பம் அனைத்தையும் ஏற்று உடலாகிய மக்களைப் பாதுகாப்பது கடன் ஆகும் என்று புலவர்கள் எடுத்துரைத்தனர் (Rasamanickanaar, 1961).

அடுதலும் தொலைதலும் புதுவதன்று எனக் கூறியது போல் குணக்கேடுகளும் புதுமையானவை அன்று சமுதாயக் கட்டுப்பாடும் நீதிநெறி முறை கோட்பாடுகளும் மனப்பயிற்சியும் ஓரளவுக்கு இக்குணக்கேடுகளைக் குறைக்கும். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல் அறவழிகளையே வற்புறுத்தி அறவாழ்வு வாழும் முயற்சியே அனைவரும் மேற்கொண்டால் குணகேடுகள் குறையும். இக்கட்டுப்பாட்டு வாழ்க்கை வேரிலிருந்து தொடங்குவது போல் தலைமை இடமாகிய மன்னரிலிருந்து தொடங்க வேண்டும் என்று சான்றோர்கள் எடுத்துரைத்தனர். சங்க கால மன்னர்களும் ஊருக்கு ஒரு நீதி தனக்கு ஒரு நீதி என்றில்லாமல் தம்மையும் அந்நீதிக்கு உட்படுத்திக் கொண்டு ஆண்டனர். தவறு கண்ட பொழுது தமக்கே தண்டனையும் அளித்துக்கொண்டனர். இருப்பினும் தீமை விளையும் என்றவாறு சில தவறுகள் நேரத்தான் செய்தன. அப்பொழுது தமிழ்ச் சான்றோர்கள் பொங்கி எழுந்து மன்னராயினும் அந்தத் தவறினைச் சுட்டிக்காட்டி உள்ளனர் தூற்றியுள்ளனர் வாய்ப்பு கிடைத்த பொழுதெல்லாம் திருத்தியும் உள்ளனர்.

"கள்வரைக்கோறல் கொடுங்கோல் அன்று" ஆயினும் நீரில் மிதந்து வந்த மாங்கனியே காவல் மரத்து கனி என அறியாது உண்ட அரிவைக்கு கொலைத் தண்டனை விதித்தது கொடுங்கோல் ஆகும். அத்தகைய செயல் செய்த மன்னனை பெண் கொலை புரிந்த மன்னன் என்று புலவர் உலகம் தூற்றியது. இவ்வாறு செயல் நடந்த பிறகு தூற்றுவதன்றி செயல் நடக்கும் முன்பே அறிவுரை கூறி அந்த கொடுஞ்செயல்கள் நடைபெறாது தடுத்தும் உள்ளனர் ஆன்றோர்கள்.

பழிக்குப் பழி வாங்குதல் மன்னர்களின் இயல்பு. ஆயின் தந்தை தனக்கு எதிராகப் போர் தொடுத்தான் என்பதற்காக யானை கண்டு மிரளுமா பேதைச் சிறார்களைக் கொல்வது அறமற்றது என்பதைத் தக்க தருணத்தில் எடுத்துக் கூறி அச்செயல் நிறுத்தப்பட்டது. உறவுள்ள இடத்தில் பகையும் இருக்கும். ஆயின் இனத்துக்குள்ளே நடக்கும் போர் வெளியில் தெரிந்தால் வெட்கக்கேடு என்று

ஒருவேளை தோற்பின் தோற்பது நுங்குடியே என உடன்பிறந்தார்க்கிடையே நடைபெற இருந்த போர் தடுக்கப்பட்டது. புகழ்வது போல் உண்மையை உளம் கொள்ளுமாறு எடுத்துக்காட்ட தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் இடையே போர் நிகழாமல் தடுத்தார் தூதாகச் சென்ற அவ்வையார் இத்தகைய நிலைகள் சில இருந்ததால்தான் மன்னருக்குப் பொதுவாக அறிவு சுட்டிய புலவர்கள் சில வேளைகளில் இடித்துக் கூறியும் அறிவு புகட்டினர் (Rasamanickanaar, 1961). இடித்துரைக்க ஆளில்லாத மன்னன் கெடுப்பார் இன்றியும் தானே கெடுவான் என உணர்ந்த அக்கால மன்னர்களும் செவி கைப்ப கூறப்படும் இடுப்புகளுக்கு செவி சாய்த்துள்ளனர் செவி கைப்பக் கூறுவோரைச் சினவாது குற்றம் உணர்ந்து தன்னையே திருத்திக் கொண்டுள்ளனர். அக்கால, சான்றோர்களும் தம் நலனையோ இன்பத்தையோ கருதி மன்னர் தம் குற்றங்களைக் கூறாது புகழ் பாடியே காலம் கடத்தாது குற்றத்தை மன்னர் முன்னிலையில் எடுத்துக் கூறும் மனத்திண்மைப் பெற்றிருந்தனர்.

## போர் அறம்

சங்ககாலத் தமிழர்கள் எதைச் செய்தாலும் அறம் சார்ந்தே வாழ்ந்திருக்கின்றனர். அறமுறை கொண்டு வாழ்வியலை கடைபிடித்தனர். போர் துவங்கும் முறையும் அறத்தை அடியொற்றியே இருந்திருகின்றது. அறம் வழுவிய போர் நெறி என்று உணர்ந்தால் மன்னர்கள் உடனே போரினைக் கைவிட்டு விடுபவர்களாக இருந்திருக்கின்றனர் (Rasamanickanaar, 1961).

ஆவும் ஆன் இயற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்

எனும் வரிகள் அற முறையில் போர் நடைபெற்றதை வரையறை செய்கின்றது. பசுவும் பசுவின் பண்பினை ஒத்த பார்ப்பனரும், பெண்களும், நோயுற்றவரும், இறந்து தென்திசையில் வாழும் தன் குடியில் முன்பு பிறந்து இறந்தவர்களுக்கு நீர்க்கடன் செய்வதற்குரிய பிள்ளைகள் பெறாதவர்களும், போரிலிருந்து விலக்குமாறு கூறப்படுகின்றது. அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். இது போரின் அறநெறியை உணர்த்துகின்றது (Kathir Murugu, 2008). ஒன்றினையொன்று அடக்கியும் அழித்தும் உயிர் வாழ எண்ணுவது உயிரியல் பண்பு. இது ஒரு வகையில் போர்ப் பண்பே ஆகும்.

இந்தப் போர் நெறியில் அறநெறியைப் பின்பற்றினர் சங்க கால வேந்தர்கள். போரிடும் வேந்தர்கள் தம்முடம் செய்வதற்குரிய இடம், நாள் முதலியவைகளைத் தேர்வு செய்த பின்னர் போரிடத் தொடங்குவார். அந்த அடிப்படையில் தான் நல்ல நாள் பார்த்து வாள், குடை போன்றவற்றைப் புறவீடு செய்வர் என்பது வெண்பாமாலையால் அறிய முடிகிறது (Rasamanickanaar, 1961).

“தெம்முனை தேயத் திறல் விளக்கு தேர்த்தானை

வெம்முனை வெற்றி விறல்வெய்யோன் தம்முனை

நாட்டப் பொறி செறித்து நண்ணார்மேற் செல்கென்று”

என்று கூறி வேந்தன் குடையைப் புறவீடு விட்டான் எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது பகைவரை எச்சரிக்காமல் மெய் வீரர் போர் தொடங்கார் என்ற உண்மை குறிப்பாக உணர்த்தப்படுகின்றது.

போர்க்களத்தில் இரு பெரும் வீரர்கள் போரிடும் பொழுது புறம் கொடுத்து போர்க்களத்தில் ஓடினால் அவர்களைத் துரத்திச் சென்று போரிடுதல் அறம் ஆகாது அத்தகையாரோடு போரிடுவது தம் வீரத்திற்கு இழுக்கு எனவும் கருதி இருக்கின்றனர் (Rasamanickanaar, 1961).

இதனை

“செல்வுழி எழாஅ நல்லோர் முதியன்”

என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. முதுகு காட்டுபவனோடு போரிடுவது இழுக்கு என்பது தெளிவாகின்றது.

திருவள்ளுவர்

“மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமா அன்னார்

உயிர் நீப்பர் மானம் வரின்”

என்று சுட்டுகின்றார். பழந்தமிழர்கள் மான உணர்வு நிறைந்தவர்களாக இருந்திருக்கின்றனர் (Varatharasanaar, 2014). வீரம் நிறைந்த அவர்கள் தன்மானத்திற்கு இழுக்கு என்றால் தம் உயிரையும் கொடுத்து அதனைக் காத்திருக்கின்றனர். இகழ்ந்தவர் அறியும் படி தன் வீரத்தைக் காட்டி இருக்கின்றனர். பழந்தமிழரின் வீரமும், மானமும் பிரிக்க இயலாத பண்புகளாக விளங்கி இருக்கின்றன.

## பகிர்தல் அறம்

மன்னர்கள் பகைவர்களைப் போரில் வெற்றிக் கண்டு அவர்களின் ஆ நிரைகளைக் கவர்ந்து வந்த வீரர்களை பாராட்டும் விதமாக விருந்து படைத்திருக்கின்றனர். பகைவர்களிடம் கவர்ந்து வந்த பொருட்களை பங்கிட்டு மகிழ்ந்திருக்கின்றனர் (Rasamanickanaar, 1961).

“நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்

பாசுவல் இட்ட புண் காற்பந்தர்ப்

புனல் தரும் இள மணல் நிறையப் பெய்ம்மின்”

என்ற வரிகள் விருந்து நிகழ்வினைப் புலப்படுத்துகின்றன. மன்னர்கள் போர்க்களத்தில் தமக்கு என்று விதவிதமான உணவு என்று இல்லாமல் அனைவருக்கும் சமமாக உயர்ந்த ஊனையும் துவையலையும் உடைய உணவினைப் புறம் கொடுத்து ஓடாத தம் வீரர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களில் அளித்து மகிழ்ந்து ஒன்று கூடி வாழ்ந்திருக்கின்றனர் (Rasamanickanaar, 1961).

மன்னர்களைப் புகழ்ந்து பாடி பரிசு பெற்ற புலவர்கள் தான் மட்டும் அனுபவிக்காமல் அதனைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற அற உணர்வு உடையோராகப் பரிசில் பெற்றோர்த் திகழ்ந்திருக்கின்றனர் (Rasamanickanaar, 1961).

பரிசில் பெற்று வந்த பாணன் தான் பெற்றப் பரிசினை தான் மட்டும் அனுபவிக்காமல் பிறருக்கும் அப்பரிசினைப் பகிர்ந்து கொடுக்கும்படி தம் உடனிருப்பவரைப் பார்த்துக் கூறுகின்றான்.

“நின் நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்

பல் மான் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்

கடும்பின் கடும் பசி தீர யாழ நின்”

என்னும் வரிகளில் பகிர்ந்து கொடுக்குமாறு வலியுறுத்தும் செய்தி காணப்படுகின்றது. இவ்வாறு புலவர்கள் தான் பெற்ற பரிசிலைப் பகிர்ந்து அளித்து மகிழ்ந்து வாழ்ந்து இருக்கின்றனர் (Swaminathan, 1971).

நம் சங்க கால மண்ணில் வேரூன்றிய இந்தப் பகிர்தல் அறத்தை மறந்ததால் தான் தாது வருட பஞ்சத்தின் போது லட்சக்கணக்கான மக்கள் மடிந்தனர். அமர்த்தியா சென் அவர்களும் உணவுக் கிடங்கில் உணவுப் பொருட்கள் இருந்தும் உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொடுக்காததால் தான் பல உயிர்கள் தாது வருட பஞ்சத்தின் போது மடிந்து போயின என்று தனது கருத்தை கூறியிருக்கின்றார். இந்தக் கொரோனா காலகட்டத்திலும் பகிர்ந்து உண்டு வாழக்கூடிய அறம் இல்லாமல் இருந்ததால்தான் பல விளிம்பு நிலைத் தொழிலாளர்கள் புலம்பெயர்ந்து மடிந்து போகக்கூடிய சூழ்நிலை உருவானது.

## கல்வி அறம்

நாட்டை நன்முறையில் ஆட்சி செய்யக்கூடிய அரசன் நிச்சயமாகக் கல்வி அறிவுடையவனாக இருக்க வேண்டும் என்பது புறநானூற்றுப் பாடல்களால் தெளிவாகின்றது.

ஒரு அரசன் தான் விருந்தினர்களுக்கு ஏற்றவாறு இல்வாழ்க்கை நடத்தாவிட்டால் என் அறிவு கெட என்று கூறியுள்ளான். மேலும் அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே என்ற வரிகளில் இருந்து நல்ல அறிவுடைய அரசாக ஒருவன் இல்லாமல் இருந்தானானால் அவனால் உலகமும் கெடும் என்பது வெளிப்படையான உண்மையே. மேலும் நல்ல அரசனுக்குரிய முக்கியமானக் கடமைகளில் ஒன்று குடிமக்களுக்கு நல்ல கல்வி புகட்ட வழிவகுத்து கொடுப்பதே என்று புலவன் சுட்டிக் காட்டுகிறான் (Rasamanickanaar, 1961).

“நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே”

சங்ககாலத்தில் அந்தணர்களுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களைக் கல்வியாளன் என்று பாராட்டியுள்ளனர். அவர்கள் தான் மறைமுகங்களைக் கற்று பிறருக்கும் பயன்படும் படி செய்தவர்களாகவும் வாழ்ந்தனர். ஆனாலும் பிறரும் படித்தனர். இவர்களால் தான் சமயக் கல்வி உதிக்கப்பட்டது. என்பதை அறிய முடிகின்றது (Rasamanickanaar, 1961).

“வேத வேள்வித் தொழின்”

சங்ககாலத்தில் வாழ்க்கைக் கல்விக்கு மிகச் சிறந்த இடம் கொடுக்கப்பட்டிருந்தது. என்பதற்கு புறநானூறு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும் (Rasamanickanaar, 1961).

ஈன்று புறந்தருதல் என்ற பாடல் வரிகள் மூலம் வாழ்க்கைக் கல்வியைப் பற்றித் தெளிவாக அறிய முடிகின்றது. தாய், தந்தை, கொல்லன், அரசன், வீரன் இவர்களுடைய மரபு வழி தொடர்பு என்ன என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. மேலும் தந்தையுடைய தொழிலுக்கு ஏற்றவாறு மகனையும் ஈடுபடுத்தப்பட்டு அதற்கு ஏற்றவாறு கல்வியும் போதிக்கப்பட்டது (Rasamanickanaar, 1961). புறநானூற்று காலத்திலும் குருகுலக் கல்வி முறை இருந்திருக்கிறது.

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே”

கல்வியினால் உயர்வு தாழ்வு கிடையாது. நால்வகை வர்ணத்தாரில் கீழ்க்குலத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர் கல்வியினால் சிறப்பு பெற்றிருந்தால் அவரை வணங்கி கல்விக் கற்று வந்தனர் என்பது புறநானூற்று காலத்திலும் இருந்திருக்கின்றது. அனைவருக்கும் சமமான கல்வி போதிக்கப்பட்டிருக்கின்றது (Rasamanickanaar, 1961).

“வேற்றுமை தெரிந்த நூற்பாலுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே”

எனவே எக்காலத்திலும் கற்றவனுக்குச் சிறப்பிடம் இருந்திருக்கின்றது என்பது தெரிகிறது (Rasamanickanaar, 1961). கல்விக்குச் சிறந்த இடம் சங்க காலத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்நூலில் காணும் செய்திகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும் (Kathir Murugu, 2008).

கல்வி அறிவுடையோர் கூறிய அறிவு நெறிப்படியே அரசனும் செயல்பட்டான் அது மட்டுமின்றி ஒரு தாய் தன் மக்களுள் மூத்தோனுக்குச் சிறப்பு கொடுக்காமல் அறிவுடையோனுக்குச் சிறப்பு கொடுத்திருக்கிறாள் என்று அறிய முடிகின்றது.

“பிறப்போ ரன்ன வுடன் வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்

ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னா தவருள்

அறிவுடையோனா றரசுஞ் செல்லும்"

அரசியலுக்கு வேண்டிய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அமைச்சர்களோடு நின்று அறிஞர்கள் உதவியும் அரசன் வேண்டி இருக்கின்றான். கல்வியாளனுக்கு எந்த இடத்திற்குச் சென்றாலும் சிறப்பு உண்டு என்பது புறநானூற்று வழி தெளிவுறுத்துகின்றது (Kathir Murugu, 2008).

"எத்திசைச் செல்லினும் அத்திசைச்சோறே"

கல்வி அறிவால் அறியாத மடவோர்களை அறியச் செய்ய முடியும் என்றும் அரசனுக்கும் ஆலோசனைக் கூறக்கூடிய அளவுக்கு கல்வியினுடைய சிறப்பு மேலோங்கி இருந்ததையும் அறியலாம். சிந்து சமவெளியிலிருந்து கீழடி வரை காணப்படுகின்ற மண்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் இலக்கணப் பிழை இன்றி காணப்படுவதற்கு மிகச்சிறந்த கல்வி அமைப்பு முறை மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது என்பதற்குச் சான்றாகப் புறநானூறு திகழ்கின்றது (Varatharasanaar, 2014).

## ஈதல் அறம்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள் நான்கனுள் இன்பம் மட்டும் அகமாகவும் ஏனைய மூன்றும் புறமாகவும் அமையும். மூன்று புறப் பொருள்களுள் புறநானூற்றில் பாடப் பெறுகின்றன. புறநானூற்று அறத்தினில் மிகுந்தும் சிறந்தும் வருவது ஈதல் அறமே

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்ற தமிழ் மறையின் அறக்கருத்து புறநானூற்றில் சிறப்புறக் காணலாம் (Varatharasanaar, 2014).

ஒருங்கு கூடாத மூவேந்தரும் ஒருங்கிணைந்த நிலையில் அவரைக் கண்டு உவந்து வாழ்த்தும் அவ்வையார் அவருக்கு உரைத்த உறுதிப்பொருளும் இந்த ஈதலே இன்றி வேறு இல்லை.

"இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி

வாழ்தல் வேண்டுமி வண் வரைந்த வைகல்"

என்பது அவர் அறவுரை. ஏன் இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசவேண்டும் அதற்கும் அவரே காரணம் காட்டுகின்றார் (Varatharasanaar, 2014).

"வாழச் செய்த நல்வினை

யல்லது

ஆழுங் காலைப் புனை பிறிதில்லை"

என்பதே அவர் காட்டும் காரணம் எனவே இம்மையில் வாழும் போது செய்த நல்வினையே மறுமைக்கும் புணையாகும் என்ற கருத்து இங்கே புலனாகின்றது (Varatharasanaar, 2014).

கொடுப்பதில் குறையாது கொடுத்தல் என்பதும் ஈதலில் ஏற்றமிக்க பண்பாகும். இப்பண்பு புலவரிடையே பரந்தும் சிறந்தும் காணப்படுகின்றது. மாரி என்ன வன்மைத் தேர்வேள் ஆய் என்று ஆய் அண்டிரனைக் குறிப்பர் முடமோசியார். மழையும் நாணுமாறு இரவலர்க்கு வரையாது ஈயும் வன்மையுடையவனாகச் சேரமான் குட்டுவன் கோதையைப் பாடுவர். புறநானூற்று ஈதல் பண்புகளில் மிகவும் பாராட்டுதலுக்குரியது விளம்பாத ஈகைப்பண்பு எனலாம் இப்பண்பினால் அதியமான் நெடுமானஞ்சியும் கோப்பெருநள்ளியும் சிறக்கின்றனர். நெல்லின் இனிய பழத்தை அது

பெறுதற்கரியதென்று கருதாமலும் அதனால் பெரும் பேறு இன்னவென்று கூறாமலும் தமக்கு கொடுத்த அதியமானின் பண்பினை ஔவையார் வியந்து பாராட்டுகின்றார்.

## முடிவுரை

தமிழர்களின் அருட்பெரும் பேழை என கருதப்படும் சங்க இலக்கியங்களில் அகமாயினும் புறமாயினும் இரண்டுமே நம் மக்களின் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வாழ்வியலை வெளிப்படுத்துகின்றது. புற இலக்கியங்களில் சங்ககால மக்கள் வாழ்வியல் பல்வேறு கோணங்களிலும் ஆராயப்பட்டுள்ளன. அவை சங்க கால மன்னர்கள் அறம் காப்பதையே தலையாயக் கடமையாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது. குல மானம் காப்பது தங்கள் புகழுக்கு புகழ் சேர்ப்பது என்றும் அதனை தம் கடமை என்றும் கருதி இருக்கின்றனர் என்று உணர முடிகின்றது போருக்கான ஒழுங்கு முறைகள் வரையறுக்கப்படுகின்றன. பண்டைய வேந்தர்கள் மானத்தைப் பெரிதாகக் கருதிய பான்மையை அறிய முடிகின்றது. அற ஆட்சி நடைபெற்றமையால் மக்களின் செம்மாந்த வாழ்வியலை அறிய முடிகின்றது. அறத்திலே உயர்ந்த அறமாகிய ஈதல் அறம் குறித்து அறிய முடிகின்றது. மனிதர்கள் ஆற்ற வேண்டிய தலையாய கடமைகள் பற்றி இனிவரும் தலைமுறையினருக்கு புறநானூறு எடுத்து இயம்பு கின்றது.

## References

Kathir Murugu, (2008) Aranerisaram, Saradha Pathippagam, Chennai, India.

Rasamanickanaar, M. (1961) Tamilar Valvu, Santhi Library, Chennai, India.

Swaminathan, U.V. (1971) Purananuru, U.V.S. Library, Chennai, India.

Varatharasanaar, M. (2014) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License